தமிழ்நாடு அரசு

<u>சுருக்கம்</u>

வீட்டுவசதி – தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் – மனைகள், வீடுகள், குடியிருப்புகள் – அரசு விருப்புரிமை பங்கின் கீழ் ஒதுக்கீடு பெற தகுதியுடையோர் பட்டியலில் மேலும் சில பிரிவினர்களை சேர்த்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

= = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = =

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (வீ.வ.4(2))துறை

அரசாணை (நிலை) எண்.88 நாள் 20.5.2003

படிக்க:-

1. அரசாணை (நிலை) எண்.1574, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 24.12.1991.
2. அரசாணை (நிலை) எண்.288, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 28.8.1997.
3. அரசு கடித எண்.8347/வீ.வ.4(1)/98–3, நாள் 2.7.1998.
4. அரசு கடித எண்.1801/வீ.வ.4(2)/99, நாள் 21.01.99.
5. அரசாணை (நிலை) எண்.29, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 22.1.2001.

= = = =

<u>ஆணை:</u>

மேலே 1–வதாக படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மனைகள் / வீடுகள் / அடுக்குமாடி குடியிருப்புகள் ஆகியவற்றை ஒதுக்கீடு செய்யும் பொழுது 85 விழுக்காடு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் குலுக்கல் முறையிலும், 15 விழுக்காடு அரசு விருப்புரிமையின் கீழும் ஒதுக்கீடு செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டது.

2. மேலே 2–வதாக படிக்கப்பட்ட அரசாணையில் மற்றும் 3–வதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மனைகள், வீடுகள், அடுக்குமாடி வீடுகள், கடைகள், கடைகளுக்கான மனைகள் மற்றும் வணிக வளாக மனைகள் ஆகியவற்றையும் மற்றும் அரசு விருப்புரிமையின் கீழ் ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டு ரத்து செய்யப்பட்டவை, திரும்ப ஒப்படைக்கப்பட்டவை ஆகியவற்றையும் விற்பனைக்காக அரசு விருப்புரிமையின் கீழ் ஒதுக்கீடு செய்யும்பொழுது கீழ்க்கண்ட பிரிவினருக்கு மட்டும் ஒதுக்கீடு செய்யலாம் என்றும், விண்ணப்பதாரர்கள் ஒதுக்கீடு பெறுவதற்கு வீட்டுவசதி வாரியம் ஏற்கனவே விதித்துள்ள தகுதியின் அடிப்படையில் 15 விழுக்காடு ஒதுக்கீடு செய்யலாம் என்றும் அரசு ஆணையிட்டது :–

1) திருமணமாகாத பெண்கள் (Single Woman) கணவனால் கைவிடப்பட்டோர் / கணவனை இழந்தோர்.

2) சமூக சேவையில் ஈடுபட்டுள்ளோர்.

3) உடல் ஊனமுற்றோர்.

4) இராணுவத்தினர் மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

5) தனியாக வசிக்கும் முதியோர் (Senior Citizen)

6) அறிவியல், கலை, இலக்கியம், பொருளாதாரம், பொது நிர்வாகம், விளையாட்டு போன்ற துறைகளில் உபயோகமாக பணியாற்றி சமூகத்தில் சிறப்பு வாய்ந்தவர்கள் (பொது நிர்வாகத்துறையில் உபயோகமாக பணியாற்றி சமூகத்தில் சிறப்பு வாய்ந்தவர்கள் என்ற பிரிவில் அப்பழுக்கற்ற அரசு பணியாளர்களும் அடங்குவர்).

7) சுதந்திர போராட்ட தியாகிகள்/ மொழிக்காவலர்கள்.

3. மேலே 5–வதாக படிக்கப்பட்ட அரசாணையில், அரசு பங்கீட்டின் கீழ் ஒதுக்கீடு பெற ஏற்கனவே உள்ள மேற்காணும் பிரிவுகளைத்தவிர பின்வரும் பிரிவினர்களும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என ஆணையிடப்பட்டது :–

(அ) பொது நிறுவனம், வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களில் பணிபுரிவோர்.

(ஆ) மத்திய அரசு மற்றும் மத்திய அரசு சேர்ந்த நிறுவனங்களில் பணிபுரிபவர்கள்.

(இ) பத்திரிக்கையாளர்கள்.

(ஈ) தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் பணிபுரிபவர்கள்

(உ) தேசியமயமாக்கப்பட்ட ஈட்டுறுதி நிறுவனங்களில் பணிபுரிபவர்கள்.

4. தமிழ்நாட்டில் உள்ள வாரியங்களில் பணிபுரிபவர்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் பணிபுரிபவர்கள் உள்ளாட்சி / நகராட்சிகளில் பணிபுரிவோர் ஆகியோர்களிடமிருந்து அரசு விரிப்புரிமை பங்கீட்டின் கீழ் வீடுகள் / குடியிருப்புகள் மனைகள் ஒதுக்கீடு கோரி விண்ணப்பங்கள் அரசால் பெறப்படுகின்றன.

5. அரசு விருப்புரிமை பங்கின் கீழ் பெருமளவில் வீடுகள் / குடியிருப்புகள் / மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டியுள்ள நிலையிலும், மேலே பத்தி 4–ல் குறிப்பிடப்படும் பிரிவினர்களை அரசு விருப்புரிமை பங்கின் கீழ் ஒதுக்கீடு பெற தகுதியுடையவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டு அரசு விருப்புரிமை பங்கு மனைகள் / வீடுகள் / குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்படின், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் நிதி நிலைமை மேம்படுத்துவதற்கான வாய்ப்பு உள்ளது.

6. அரசு, மேலே பத்தி 4 மற்றும் 5–ல் உள்ள நிலையினைக் கருத்திற்கொண்டு, ஆழ்ந்த பரிசீலனைக்குப்பின், 15 விழுக்காடு அரசு விருப்புரிமை பங்கின் கீழ் தமிழ்நாடு வீட்டுவசதி

வாரியத்தின் திட்டப்பகுதியில் உள்ள வீடுகள் / குடியிருப்புகள் / மனைகள் ஒதுக்கீடு பெற தகுதியுடையவர்கள் பட்டியலில் பின்வரும் பிரிவினர்களை சேர்த்து ஆணையிடுகின்றது:–



(1) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்களில் பணிபுரிபவர்கள்

(2) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வாரியங்களில் (தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் தவிர) பணிபுரிபவர்கள்.

(3) உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் நகராட்சிகளில் பணிபுரிபவர்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

லால் ராணா சைலோ,
அரசு செயலாளர்.

பெறுநர்
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை–35.
நகல்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
அமைச்சர் (வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (வீ.வ.5) துறை, சென்னை–9.
இகோ/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.